The Hindu (Tamil)

Dated: 14.06.2024

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்

# வேட்புமனு தாக்கல் இன்று தொடக்கம்

● விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி எம்எல்ஏவும், மாவட்ட திமுக செயலாளருமான புகழேந்தி உயிரிழந்ததையடுத்து, விக்கிரவாண்டி தொகுதிக்கு வரும் ஜூலை 10-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று (ஜூன் 14) தொடங்குகிறது. வரும் 21-ம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை வரும் 24-ம் தேதி நடைபெறும். மனுக்களை திரும்ப பெற வரும் 26-ம் தேதி கடைசி நாளாகும். அன்றே வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும். ஜூலை 10-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்று, ஜூலை 13-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதவி தேர்தல் நடத்தும் அலுவலராக, வட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள திமுக கூட்டணி, 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முன்னோட்டமாக இந்த இடைத்தேர்தலை கருதுகிறது.

திமுக வேட்பாளராக மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும், தேர்தல் பணிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டியில் இன்று மாலை நடைபெறும் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் திமுக மற்றும் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்று, தேர்தல் பணிகள் தொடர்பாக ஆலோசனை நடத்துகின்றனர். அதிமுக தரப்பில் போட்டியிடும் வேட்பாளர் குறித்த அறிவிப்பு நாளை வெளியாகும் என்று தெரிகிறது. நாம் தமிழர் கட்சி வேட்பாளர் குறித்து இதுவரை அறிவிப்பு வெளியாகவில்லை.

இன்று அஷ்டமி என்பதால் யாரும் வேட்பு மனுவைப் பெறவோ, தாக்கல் செய்யவோ வர மாட்டார்கள் என்று கூறப்படுகிறது. வார இறுதி விடுமுறை மற்றும் திங்கள்கிழமை பக்ரீத் விடுமுறை கழிந்து, செவ்வாய்க்கிழமை முதல் வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பாமக போட்டியா?

பாஜக கூட்டணியில் இடம் பெற்றுள்ள பாமக, விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்த ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில், பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ், கவுரவத் தலைவர் கோ.க.மணி, மாநில நிர்வாகிகள் வடிவேல் ராவணன், முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே. மூர்த்தி, முன்னாள் எம்எல்ஏ திருக்கைச்சூர் ஆறுமுகம், முன்னாள் பொதுச் செயலாளர் தீரன், வன்னியர் சங்க மாநிலத் தலைவர் பூ.தா.அருள்மொழி, முன்னாள் எம்.பி. மருத்துவர் செந்தில், வழக்கறிஞர் பாலு, பாமக மாநிலப் பொருளாளர் திலகபாமா உள்ளிட்டோர் கலந்துகொண்டு, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாமக தலைவர் அன்புமணி, "விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் பாமக போட்டியிடுவது குறித்து நிர்வாகக் குழு கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும், இடைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் பேசி முடிவெடுத்த பின்னர், அறிவிக்கப்படும்" என்றார்.

News regarding viluppuram district vikravandi assembly constituency By-election nominations starts today.

Daily Thanthi

Dated: 14.06.2024

### விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்:

# வேட்புமனு தாக்கல் இன்று தொடக்கம்

## அனைத்து ஏற்பாடுகளும் தயார்

விழுப்புரம், ஜூன்.14- விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்குகிறது. இதையொட்டி அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

**எம்.எல்.ஏ. மரணம்**

விழுப்புரம் மாவட்டம் பிடாகத்தை அடுத்த அத்தியூர் திருவாதி கிராமத்தை சேர்ந்தவர் நா.புகழேந்தி (வயது 71). விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ.வாகஇருந்த இவர், கடந்த ஏப்ரல் மாதம் 6-ந்தேதி காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார்.

இதையடுத்து அந்த சட்டமன்ற தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 6 மாதத்திற்குள் விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும்.

**தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்**

அதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முன்னெடுத்து தீவிர பணியில் இறங்கி தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது. அந்தவகையில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10-ந்தேதி நடைபெற உள்ளது.

இதன் வாக்கு எண்ணிக்கை ஜூலை 13-ந்தேதி நடைபெறுகிறது. இதையொட்டி விழுப்புரம் மாவட்டம் முழுவதும் தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது.

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் அத்தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் செய்து வருகின்றனர். வேட்பு மனுத்தாக்கலுக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது.

**வேட்பு மனுதாக்கல்**

இந்த சூழலில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது. வேட்பு மனுதாக்கல் செய்ய 21-ந்தேதி கடைசி நாளாகும். வேட்பு மனுக்கள், 24-ந்தேதி பரிசீலனை செய்யப்படும். மனுவை வாபஸ் பெற 26-ந்தேதி கடைசி நாளாகும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவை விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இன்று காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேட்பு மனுதாக்கல் செய்ய வரும் வேட்பாளருடன் 4 பேர் என மொத்தம் 5 பேர் மட்டுமே தேர்தல் அலுவலகமான விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்திற்குள் செல்ல வேண்டும் என்றும் மற்ற அனைவரும் தேர்தல் அலுவலகத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவிற்கு அப்பால் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கடுமையான நிபந்தனை விதித்துள்ளது.

**100 மீட்டர் எல்லைக்கோடு**

இதனால் தேர்தல் அலுவலகத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளே யாரும் செல்லாத அளவிற்கு எல்லைக் கோடுகள் வரையப்பட்டுள்ளதோடு அங்கு போலீசார், பேரிகார்டு மூலம் தடுப்புகளை அமைத்துள்ளனர்.

அதுமட்டுமின்றி தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி வேட்பு மனு தாக்கல் செய்கிறார்களா? என்பதை கண்காணிக்கும் வகையில் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

News regarding Viluppuram district Vikravandi assembly constituency By-election nominations starts today.

Dinamalar
Dated: 14.06.2024

# இடைத்தேர்தலுக்கு மனு தாக்கல் இன்று துவக்கம்

**சென்னை, ஜூன் 14–**

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், இன்று வேட்புமனு தாக்கல் துவங்குகிறது.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, தி.மு.க., – எம்.எல்.ஏ., புகழேந்தி மறைவை தொடர்ந்து, அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று வேட்பு மனு தாக்கல் துவங்குகிறது; வரும் 21ம் தேதி கடைசி நாள்.

வேட்பு மனுக்கள் 24ம் தேதி பரிசீலனை செய்யப்படும். மனுக்களை வாபஸ் பெற, 26ம் தேதி கடைசி நாள். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். ஜூலை 10ல் ஓட்டுப் பதிவு; 13ம் தேதி ஓட்டு எண்ணிக்கை நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க., மட்டும் வேட்பாளரை அறிவித்துள்ளது. மற்ற கட்சிகள் இன்னும் வேட்பாளரை அறிவிக்கவில்லை. வேட்பாளர் பெயரை அறிவித்தவுடன், அமைச்சர்கள் அடங்கிய தேர்தல் பணிக் குழுவையும் தி.மு.க., நியமித்துள்ளது.

Viluppuram district Vikravandi assambly constituency By-election nominations starts today.

Dinamalar

Dated: 14.06.2024

# 32,000 பேருக்கு வாக்காளர் அட்டை வழங்க முகாம்




**சென்னை, ஜூன் 14–**

பெரும்பாக்கம் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில், 50,000க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில், 18,000 வாக் காளர்களுக்கு மட்டுமே ஓட்டு இருந்தது. மீத முள்ள, 32,000 பேருக்கு ஓட்டு இல்லை.

இங்கு வசிப்போர் மறு குடியமர்வு செய் யப்பட்டபோது, ஏற் கனவே வசித்த பகுதி யில் இருந்த வாக்காளர் பட்டியலில் இருந்து, அவர் களது பெயர்கள் நீக்கப்பட் டன. இதனால், அவர்க ளால் எங்கும் ஓட்டளிக்க முடியவில்லை.

இது குறித்து, நம் நாளிதழில், ஏப்., மாதம் விரிவாக செய்தி வெளி யானது. இதையடுத்து தமிழக தலைமை தேர் தல் அதிகாரி சத்யபி ரதா சாஹு, செங்கல் பட்டு மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் விளக்கம் கேட்டார்.

தேர்தல் முடிந்ததும், விடுபட்ட அனைவருக் கும் வாக்காளர் அடை யாள அட்டை வழங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என, அதிகாரிகள் கூறினர்.

இந்நிலையில் பெரும் பாக்கம், 9வது குடியிருப்பு வளாகத்தில், வாக்காளர் சேர்க்கை சிறப்பு முகாம், இன்றும் நாளையும் நடத்தப்படுகிறது.

மேலும், குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட சேவைகளுக் கும், சம்பந்தப்பட்ட துறை கள் வர உள்ளன என, வாரிய அதிகாரிகள் கூறினர்.

News impact of voters missing in the draft list of general election CEO, TN conducted a special meeting with DEO, chengalpattu & 32,000 voter card distribution camp held at perumbakkam in chennai.